தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மு. ஜெகதீசன் Ph.D.,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர், தேதி: 24-1-2017
ஆசிரியர்,

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**மலை வாழ் மக்களுக்கு இயற்கை வழி சாமை சாகுபடி பற்றிய ஒரு நாள் பயிற்சி**

ஜவ்வாது மலை, நம்பியம்பட்டு ஒன்றியத்தை சார்ந்த 60 மலைவாழ் மக்கள் குடும்பங்களுக்கு (47 ஆண்கள் 13 பெண்கள்) இயற்கை வழியில் சாமை சாகுபடி மற்றும் வீட்டுக்காய்கறி தோட்டம் அமைத்தல் சம்மந்தமான ஒரு நாள் பயிற்சி 19-1-2017 வியாழக்கிழமை காலை 10 மணியளவில் நடைபெற்றது. இதனை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் உள்ள பூச்சியியல் துறை, அரசு வேளாண் துறையின் உதவியோடு நடத்தியது.

இப்பயிற்சியில் இயற்கை முறையில் ஒரு ஏக்கர் அளவில் சாமை (சிறுதானியம்) பயிரை சாகுபடி செய்ய தேவையான இடுபொருட்கள் சாமை விதை (5 கிலோ) உயிர் உரங்கள் முறையே அசோஸ்பைரில்லம் (1 கிலோ), பாஸ்போபாக்டீரியா (1 கிலோ) பயிர் வளர்ச்சியை ஊக்கப்படுத்த பஞ்சகாவ்யா (1 லிட்டர்) வறட்சியை தாங்க இளம் சிவப்பு மீதைலோடிராப் நுண்ணுயிர் (350 மிலி) சூடோமோனஸ் (1 கிலோ), பிவேரியா பேசியானா (250 கிராம்), நிம்பிசிடின்(100 மில்லி), மஞ்சள் நிற ஒட்டும் பொறி மற்றும் காய்கறி தோட்டத்திற்கு தேவையான வெண்டை, கீரை மற்றும் புடலை விதைகள் இலவசமாக வழங்கப்பட்டது. இந்த பயிற்சியில் சாகுபடி தொழில் நுட்பங்கள், உயிர் உரங்களை பயன்படுத்தும் விதம், வளர்ச்சியை சீராக்கும் நுண்ணுயிரிகளை பயன்படுத்தும் முறை மற்றும் இயற்கை முறையில் பூச்சி நோய்களை கட்டுப்படுத்துவது பற்றிய விளக்கம் வழங்கப்பட்டது. மேலும் நன்மை செய்யும் ஒட்டுண்ணிகள் மற்றும் இரைவிழுங்கிகளை வயலில் எவ்வாறு பயன்படுத்தலாம் என்ற செயல் விளக்கமும் நடத்தப்பட்டது.

இந்த பயிற்சிக்கு தேவையான நிதி உதவி இந்திய தேசிய வேளாண் ஆராய்ச்சி கழகம் - அகில இந்திய ஒருங்கிணைந்த ஆராய்ச்சி – உயிரியல் முறை பூச்சிக்கட்டுப்பாடு திட்டத்தில்

வழங்கப்பட்டது. இப்பயிற்சியை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில், பூச்சியியல் துறையை சார்ந்த முனைவர் சீ.ஸ்ரீதரன், பேராசிரியர் (பூச்சியியல்), முனைவர் பெ.அ.சரவணன், உதவி பேராசிரியர் (பூச்சியியல்) மற்றும் திரு.பெ.வடமலை, வேளாண்மை உதவி இயக்குநர், போளூர், முனைவர் நா.ராமகிருஷ்ணன், விதைச் சான்று அலுவலர், அவர்களின் உதவியுடன் நடத்தினார்கள். இந்த பயிற்சியின் இறுதியில் நடந்த கலந்துரையாடலில் மலை வாழ் மக்கள் இப்பயிற்சியானது தங்களுக்கு மிகவும் உதவிகரமாகவும் குறித்த நேரத்தில் வழங்கப்பட்டதாகவும் தெரியப்படுத்தினார்கள்.

உதவி மக்கள் தொடர்பு அலுவலர்